மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 114. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

114—

பணிபுரியும் பெண்களுக்கு விடுதி.

*வினா எண் 1702—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடியில் பணியிலிருக்கும் பெண்கள் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிட்டத்தட்ட 30 விழுக்காடு ஒதுக்கி, அதை நிறைவேற்றுகின்ற அரசாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு விளங்கி வருகிறது. அவ்வாறு தொழில்களில், வேலை வாய்ப்பில் ஈடுபடுகின்ற பெண்களுக்கு, அவர்களுடைய முக்கியத்துவம் கருதி, பாதுகாப்பு கருதி, பெண்கள் அதிகமாக வேலை செய்கின்ற இடங்களில், குறிப்பாக பரமக்குடி நகரில் பல்வேறு வங்கிகள் இருக்கின்றன; அதுமட்டுமின்றி 6 உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆர்.டி.ஓ., டி.டி.ஓ., போன்ற பல்வேறு அலுவலகங்கள் நிறைந்த பரமக்குடி நகரில் வேலை செய்யும் அந்தப் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அரசு சார்பில் அந்தப் பெண்களின் பாதுகாப்புக் கருதி, ''ஒர்க்கிங் உமன்ஸ் ஆஸ்டல்'' கட்டுவதற்கு, அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசில் ஏறக்குறைய 7 பெண்கள் விடுதிகள் இருக்கின்றன. தற்சமயம் புதிதாக இந்த ஆண்டு சென்னையிலே ஒரு பெண்கள் விடுதி கட்டப்படவிருக்கிறது. ஒரு பெண்கள் விடுதி புதியதாக கட்டப்பட வேண்டுமென்றால் 5 இலட்சம் ரூபாய் செலவாகும். அதுவும் பெண்கள் விடுதிகள் மாவட்ட தலைநகரங்களிலேதான் கட்டப்

1992 பிப்ரவரி 10]

பட முடியும் என்கின்ற காரணத்தினாலே பரமக்குடியில் கட்டு கின்ற யோசனை தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதிகளில் இருக்கின்ற பெரு நகரங்களில், குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் பரமக்குடிதான் அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக இருக்கிறது. இப்படிப் பட்ட பகுதிகளில், மாவட்ட தலைநகரங்களில் அமைப்பதைக் காட்டிலும் மக்கள் ஜனத்தொகைக்கேற்ப, வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுத்து, அங்கே வேலை செய்கின்ற மகளிர் நலன் கருதி அங்கே அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களினுடைய தலை நகரங்களிலேதான் போக்குவரத்துக்கு வசதியும், மாவட்ட அலு வலகங்களும் இருக்கின்ற காரணத்தினால் மாவட்ட தலைநகரங் களிலேதான் தற்போது பெண்கள் விடுதி அமைக்கின்ற யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்கள், மாவட்டத் தலைநகரில் மட்டும்தான் பெண் களுக்கான விடுதி அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்று சொல் கின்றார்கள். தனியார் அமைக்கின்ற விடுதிகளுக்கு அரசு உதவி அளிக்குமா? மாவட்டத் தலைநகரில், பெண்களுக்கு என்று அமைக்கப்படுகின்ற தனியார் விடுதிகளுக்கு அரசு உதவி புரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலை வர் அவர்களே, தனியார் நிறுவனங்கள்—தொண்டு நிறுவனங்கள் மகளிர் விடுதிகளை அமைக்கும் என்று சொன்னால், அரசு அதற்கு 35,000 ரூபாய் மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறது தற்போது. அதைப் போல அதையும் பரிசீலிக்கும் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு ஆண் குழந்தைகள்

இல்லை என்றாலும்கூட, பெண் குழந்தைகளை அரசே முன் வந்து 2,000 ரூபாய் டெபாசிட் கட்டியும், கல்விக்கு முக்கியத் துவம் கொடுக்கின்ற இந்த அரசில் பெண்களுக்கு, பாபுலேஷன் அதிகமாக உள்ள தொழில் நகரங்களில் பாதுகாப்பு இன்றி வேலைக்குச் செல்லுகிற பெண்களின் பாதுகாப்பு கருதியும், தன் னுடைய குழந்தையை வீட்டிலே விட்டுச் சென்று, மாலை முழு வதும் வேலை பார்த்துவிட்டுத் திரும்புகின்றவர்களுக்கும் ஒரு பாதுகாப்பு அளிப்பதைக் கருதியும், நிறைய வாடகை கொடுத் துத் தங்களால் வாழ இயலாதவர்களுக்கு, ஊரிலே குழந்தை களை விட்டு விட்டு வந்து, குடும்பத்தை விட்டுவிட்டு வந்து, நகரங்களிலே வேலை பார்க்கின்ற பெண்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்ற வகையிலே ஏழைகளுக்குத் தன் உயிரை ஈந்துகொண்டு இருக்கின்ற....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி. நீங்கள் நேரடி யாகத் துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கும்பொழுது ஒரு பிரசங்கம் பண்ணக் கூடாது.

டாக்டர் மு. சினியம்மாள்: டாக்டர் புரட்சித் தலைவியின் அரசிலே பெண்களுக்காக அரசு விடுதி ஒவ்வொரு நகரத்திலும் அமைத்துத் தருவதற்கு அடுத்த ஆண்டிலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவரவர்களே, வாடகைக் கட்டடத்தில் இந்தப் பெண்கள் விடுதியை நடத்த வேண்டுமென்றால், 1.5 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். எல்லா நகரங்களிலும் உருவாக்குவது என்பது நிதிநிலை நெருக்கடியைக் கொண்டு பரிசீலிக்க இயலாது. ஆனால், தொண்டு நிறுவனங்கள் செய்ய முன்வந்தால் அரசு மானியம் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்—115, செல்வி பி. நிர்மலா திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

115—

பணிபுரியும் பெண்களுக்கு விடுதி.

*வினா எண் 2050— செல்வி பி. நிர்மலா,

திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திண்டுக்கல் நகரில் பணிபுரியும் மகளிருக்கு தனி விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?